**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.204** **நாள் : 06.08.2025**

**பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக பணி ஆணை வழங்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள், வரைவாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கான அறிமுகக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (06.08.2025) நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் உதவிப் பொறியாளர், உதவிப் பொறியாளர் (திட்டமிடல்), இளநிலைப் பொறியாளர், தொழில்நுட்ப உதவியாளர், வரைவாளர், பணி மேற்பார்வையாளர், நகரத் திட்டமிடல் ஆய்வாளர் / இளநிலை பொறியாளர் (திட்டமிடல்), பணி ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 2,538 இளைஞர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

இதில், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு பணி ஆணை வழங்கப்பட்ட 54 உதவிப் பொறியாளர்கள், 12 வரைவாளர்கள் மற்றும் 113 துப்புரவு ஆய்வாளர்களுக்கான பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிகள், செயல்பாடுகள் குறித்த அறிமுகக் கூட்டம் மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் தலைமையில் இன்று (06.08.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு மேயர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக பணி ஆணை வழங்கப்பட்ட உதவிப் பொறியாளர்கள், வரைவாளர்கள் மற்றும் துப்புரவு ஆய்வாளர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் மற்றும் சேவைகள் குறித்து எடுத்துக் கூறி, சிறப்பாகப் பணியாற்றிட அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு. மகேஷ் குமார், இணை ஆணையர் (சுகாதாரம்) முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம் மற்றும் தலைமைப் பொறியாளர்கள், மாநகர நல அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**